மருத்துவச் சுவடி

1989

மருத்துவ ஏடு

(மருந்து செய்முறை)

17.1.89

III

23/3/97.

15/9/97.

உரை எழுதப்பட்டது
3.7.2013

ஜெயமோகன் வழங்கிய

மருத்துவச்சுவடி.

ஏடு பக்கம் - 24.

படி எடுத்தவர் - க.லலிதா

படி எடுத்த நாள் - 17.1.89

பொருளடக்கம்

லோக செந்தூரம்

250. லோக செந்தூரம் செய்யும் முறை வருமாறு. அரப்பொடியில் நல்லெண்ணெயைத் தேவையான அளவு ஊற்றி வறுத்துப் பீங்கானில் வைத்து அதில் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து கிண்டி வைத்துக் கொள்ளவும். நான்காம் நாளில் இதைக் கழுவி வெயிலில் வைத்துலர்த்தி 35 கி அளவு எடுத்துக் கொள்ளவும்.

251. முறைப்படி சுத்தி செய்த கெந்தகத்தை 35 கி எடுத்து மேற்சொன்ன அரப்பொடியுடன் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் 12 மணிநேரமும் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் 12 மணிநேரமும் அரைத்து, 5 கி முப்புவையும் இதனுடன் சேர்த்தரைத்து வில்லைகளாய்ச் செய்து காய வைத்துக் கொள்ளவும். காய்ந்தவுடன் முப்பது எரு வரட்டியாலான புடத்தில் போட்டெரிக்கவும்.

252. புடம் ஆறின பிறகெடுத்து மீண்டும் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால் 6 மணி நேரம் அரைத்து வில்லைகளைச் செய்து வெயிலில் உலர்த்தி முன்பு செய்தது போலவே புடத்தை இடவும். ஆறின பின் எடுத்துப் பார்த்தால் முருக்கம்பூ போல் சிவந்த நிறமாய்த் தோன்றும். இந்தச் செந்தூரத்தில் 488 மி.கி எடுத்து அனுபானமாகத் தேனைச் சேர்த்துச் சாப்பிடவும்.

லோக செந்தூரம்

73. அ. தானென்ற லோக செந்தூரங் கேளு
தியவான அரைப்பொடியின் நல்லெண்ணெய் விட்டு
வானென்ற நாழிகைதான் அறுப தானால்
நலமாக வறுத்ததனைப் பீங்காணி லிட்டு
நானென்ற படிச்சாறு பிழிந்து காட்டு
நலமாகக் கிண்டிவைத்து நாலா நாளில்
தேனென்று ரஞ்சியினைக் குழியில் போட்டு
திறமாக ரவியுலத்தி வெந்தான் தூக்கே. 250

1×2 5:0

தூக்கியே சுத்திசெய்து கெந்தி கேளு
சுகமாக வெண்மொன்றாய் கூடப் போட்டு
ஆ. தூக்கியே படிச்சாறான் சாமம் ஆறு
தளமான பொற்றலையான் சாமம் ஆறு
தேக்கியே அரைக்கயிலே முப்பு வப்பா
திறமாக களங்கிருந்து திறமாய்ப் போடு
வாக்கியே வில்லைசெய்து ரவியில் காய்ந்தால்
வளமான முப்புக்கரு புடத்தைப் போடே. 251

போட்டப்பா மருக்காரும் பொற்றலை யானான்
புகழான சாமந்தான் அரைத்துக் கொண்டு
நாட்டப்பா வில்லைசெய்து ரவியுலர்த்தி
நலமாக முன்போலே புடத்தைப் போடு
ஆயப்பா ஆறினபின் எடுத்துப் பாரு
அப்பனே முருக்கம்பூப் போலே வர்ணம்
74. அ. கூட்டப்பா பணவிடைதான் அனுபானத்தின்
இதமாகத் தேன்கூட்டிக் கொள்ளு கொள்ளே
252

253. அவ்வாறு உட்கொள்ள பாண்டு நோயின் வகைகள் தீரும். பித்தவெட்டை, பித்த வாய்வு, அரோசகம் என்னும் உணவில் வெறுப்பு, உணவுத் தோடம், மயக்கம், வாந்தி, பித்தம், ஆகிய நோய்கள் லோக செந்தூரத்துடன் இஞ்சி சூரணத்தைச் சேர்த்துச் சாப்பிட குணமாகும்.

254. காந்தத்தையும் மேற்சொன்ன செயல்முறை படியே செய்தால் காந்த செந்தூரமாகும். அதற்கேற்ற அனுபானத்தைக் கூட்டி உட்கொண்டால் ஆறுவகை மூலமும் பித்தமும் பாண்டு வகைகளும் தீரும். இந்தச் செந்தூரத்தைத் தேனில் கலந்து சாப்பிட சிவபெருமானைப் போல் ஒளியுடன் திகழ்வர்.

255. <u>அயக்காந்த செந்தூரம்</u>

அயக்காந்த செந்தூரம் செய்முறை வருமாறு. அயத்தையும் காந்தத்தையும் தனித்தனியே முறைப்படி சுத்தி செய்து சம அளவு எடுத்துக் கொள்ளவும். சாதிலிங்கத்தைச் சம அளவு வெங்காரம் கால் பங்கு, இரசம் கால் பங்கு, கெந்தகம் கால் பங்கு எடுத்துச் சுத்தி செய்து கல்வத்தில் வைத்து எலுமிச்சம் பழச்சாற்றால் 12 மணிநேரம் அரைத்துக் கொள்ளவும்.

கொள்ளவே பாண்டுவகை யெல்லாந் தீரும்
குறிப்பான பித்தவெட்டை பித்த வாய்வு
நல்லவே வாயுவென்ற தெல்லாந் தீரும்
நாட்டாது அரோசகங்கள் அன்னத் துவேஷம்
விள்ளவே மயக்கமொடு வாந்தி தீரும்
விருதான பித்தமெல்லாம் விடியவாய்ப் போகும்
தெள்ளவே யாந்தியென்ற கிரகணத்தில்
சாப்பிடவே தான்கட்டு சாடும் பாரே. ௨53.

பாரப்பா காந்தத்தை யிப்படியே செய்யின்
பரிவான காந்தமது சிகப்பு மெத்த
சாரப்பா அப்பானை மறிந்து கொண்டால்
தப்பாது மூலவகை யாறுந் தீரும்
சேரப்பா பித்தமெல்லாம் சிதறிப் போகும்
தேகத்தில் பாண்டுவெல்லாந் தீரும் தீரும்
ஆறப்பா தேனிலே கொண்டா யானால்
அக்கினைப்போல் காந்தியா மறிந்து கொள்ளே

அயக்காந்த செந்தூரம். ௨54.

கொள்ளவே அயக்காந்த செந்தூரங் கேளு
குறிப்பான நெண்டையந்தான் சுத்தி செய்து
நள்ளவே சமனாக நெண்டுருங் கூட்டி
நலமான சாதிலிங்கம் சமனாய்க் கூட்டி
தள்ளவே னாரதம் கான்றான் கூட்டி
தியவான ரசங்காந்தான் கெந்தகமனப்பா
விள்ளவே சுத்திசெய்து கல்வத் திட்டு
15.அ. விருதான படிச்சாறால் சாமம் நாலே.
௨55.

256. 10கி முப்புவைச் சேர்த்து பொற்றலைக் கையாந்
-தகரைச் சாற்றால் 12மணி நேரம் அரைத்து
வில்லைகளாய்ச் செய்து சட்டில் வைத்துமூட்
-டிணை மூடி முப்பது எரு வரட்டியாலான
புடத்தில் போட்டு எரிக்க செந்தூரமாகும்.
சிவபெருமானின் நிறத்தைப் போலிருக்கும்
488மி.கி செந்தூரத்தைத் தக்க அனுபானத்தில்
கொடுக்கத்தீரும் நோய் பலுமாறு.

257.
ஆறு வகைப் பாண்டு, ஆறு வகைக் கிராணி
நாற்பது வகை பித்தம், வாய்வு, வாதம்
அக்கினி மந்தம் தீரும். தாது விருத்தியாகும்.
வெளுத்திருந்த உடலானது கருவண்டு
போல் மிடுக்காய் விளங்கும். தேனில்
செந்தூரத்தைக் கலந்து உட்கொண்டால்
பாண்டு நோய் தீரும்.

நாளாக முப்பூவும் களைஞ்சி தெண்டு
நலமாகும் பொற்றலையான் சாமம் ஊறு
காலாக அரைத்துவில்லை ரவியிற் காய்ந்தால்
கருவான ஓட்டின்வைத்து ஓடு மூடி
காலாக முப்பத்தொரு புடத்திற் போட்டு
தப்பாது செந்தூரம் அருணன் போலாம்
மாலாகப் பணவிடைதா னனுபானத்தில்
மைந்தனே கொண்டுவரத் தீரும் நோய்கேள்
256

கேளப்பா பாண்டாறு கிராணி யாறு
கிருமியாம் பித்தமது நாற்பதும் போம்
நாளப்பா வாய்வொடு வாத மெல்லாம்
நாடாது அக்கினியா மந்தந் தீரும்
சூளப்பா தாதுவெல்லா முறுக்கா யேறும்
ஆ. சுகமாக வெகுத்திடம் வண்டு போலாம்
ஆளப்பா அயதேனிற் கொண்டா யானால்
அணுகாது பாண்டுவென்ற ரோகம் போமே
257

போமப்பா வாய்வொடு சூலை யெல்லாம்
பொல்லாத குஷ்டநோய் சொல்லா ரோகம்
நாமப்பா வாய்வொடு சூலை யெ-

258. வாய்வு, குன்மை, கெர்ப்பநோய், வாந்தி,
பொருமல், உஷ்ண வாய்வு, சிலேற்பனங்கள்.
தலைமயக்கம், வாய் ஊறல் ஆகிய நோய்
-கள், பித்தம் அதிகமாதல், விகார பித்தமாய்
பைத்தியமாதல் ஆகியவையும் இச்செந்தூரத்
தேனில் கலந்து உட்கொள்ள தீரும்.

259. <u>திரிலோக செந்தூரம்</u>

உலோகம், அப்பிரகம், காந்தம், இந்த மூன்றையும்
முறைப்படி சுத்தி செய்து சமமாக எடுத்துக்
கொள்ளவும். சுத்தித்த கெந்தகத்தையும் சம
அளவு [illegible] அதில் பாதி வாலைரசத்தையும்
சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றால் 12 மணி
நேரம் அரைத்துக் கொள்ளவும். அரைக்
-கும் போது 15 கி பூநீறையும் கூட்டிக்கொள்
260. -ளவும்.

அந்தக் கலவையைப் பொடுதலைச் சாற்றால்
12 மணிநேரமும் செருப்படைச் சாற்றால் 12
மணிநேரமும் குமரிச்சாற்றால் 12 மணிநேரமும்
அரைத்து வில்லை செய்து வெயிலில் உலர்த்திக்
கொள்ளவும். உலர்ந்த பின் ஓட்டில் வைத்து
ஓட்டினை மூடி சீலை மண் செய்து முப்பது
எரு வரட்டியினாலான புடத்திலிட்டு
எரிக்கவும்.

போமப்பா வாய்வொடு சூலை யென்பாம்
வெல்லாத கெர்ப்பநோய் சொல்லா தோடும்
நாமப்பா வாந்தியொடு பொருமல் விம்மல்
நாடாது உஷ்ணமாம் வாய்வு தீரும்
தாமப்பா சிலேற்பனங்க ளெல்லாந் தீரும்
தலைமயக்கம் வாயூறல் சாந்த மாகும்
வேமப்பா பயித்திய விகார பித்தமெல்லாம்
வைகுசுருக்காய் தீருமடா யின்னங் கேளே 258.

திரிலோக சிந்தூரம்

கேளப்பா திரிலோக சிந்தூ ரந்தான்
கெடியான லோகமொடு அப்பிரகம் காந்தம்
நாளப்பா மூன்றையுந்தான் சுத்தி செய்து
நலமாக சமனெடை கல்வத் திட்டு
76.அ. தானப்பா சுத்தித்த கெந்தி சமன் கூட்டி
திப்பமாய் சுத்தரசம் பாதி சேர்த்து
ஆளப்பா பழச்சாறான் சாமம் ஆறு
அப்பனே அரைக்கையிலே பூநீறு போடே
259.
போட்டப்பா முக்கலசந் தாக்கி யேதான்
பொருந்தவையான் நால்சாம மெரித்து நன்றாய்
நாட்டப்பா செருப்படையான் சாமம் நாலு
நன்றான குமரிச்சார் சாமம் நாலு
தேடப்பா வில்லைசெய்து ரவியின் போடு
திறமாக ஓட்டில்வைத்து ஓடு மூடி
ஆட்டப்பா சீலைசெய்து புடத்தைப் போடு
ஆறினபின் எடுத்ததை அரைத்துக் கேளே
260.

261. பிறகு அதை எடுத்து 17½ கி லிங்கத்தைச் சேர்த்துச் சோற்றுக் கற்றாழைச் சாற்றை விட்டு 24 மணிநேரம் அரைக்கவும். அரைத்த விழுதை வில்லைகளாய்ச் செய்து வெயிலில் உலர்த்தி முப்பது எரு வறட்டியினாலான புடத்தில் இட்டு எரிக்கவும். செந்தூரமாகும். (488 மி.கி) இந்தச் செந்தூரத்தைச் சஞ்சீவி சூரணத்தில் கலந்து நெய்யில் உட்கொள்ள மேகம் இருபத்தொன்றும் குணமாகும்.

262. ஆறு வகைப் பாண்டும் நாற்பது வகை பித்தமும் வாயு வகைகள், உள்சூடு, இருமல் தீரும் உடலானது நிலவைப் போல் குளிர்ந்து விளங்கும். பித்தத்தின் அதிக்கம் குறைந்து அதனால் வரும் நோய்களும் நீங்கும்.

263. <u>பஞ்சலோக செந்தூரம்</u>

தங்கம், வெள்ளி, செம்பு, காந்தம், இரும்பு ஆகிய ஐந்து லோகங்களைச் சுத்தி செய்து சம அளவு எடுத்துக் கொள்ளவும். கெந்தகத்தை 2 மடங்கும் இரசத்தை ஒரு பங்கும் வீரத்தைக் கால் பங்கும் முப்பூவை ஒரு பங்கும் எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றால் 12 மணிநேரம் அரைத்துக் கொள்ளவும்.

கேளப்பா லிங்கமதைப் பலந்தான் கூட்டி
கெடியான இமசிச்சார் சாமம் ரெட்டு
நாளப்பா அரைத்துவில்லை நிழலில் காய்ந்தால்
நன்றாக மூப்பதைத்து புடத்தில் போடு
ஆ. வேளப்பா செந்தூர மருணன் போலாம்
வெகுசுருக்காய் தந்தீவி ரோகத்தில்
தாளப்பா பணவிடைதான் நெய்யில் கொள்ள
தப்பாது மேகநீறந் தவறிப் போமே. 261.

தவறிப்போம் பாண்டுவகை யாவும் தீரும்
தப்பாது பித்தமென்ற நாற்ப தும்போம்
தவறிப்போம் மேகமென்ற யிருபத் தொன்றும்
சாந்தமாம் வாயுவெல்லா மொழிந்து போகும்
தவறிப்போம் உள்ளீடு யிருமலெல்லாம்
சந்திரன்போல் தேகமது இலிர்ச்சி யாகும்
தவறிப்போம் பித்தத்தின் கோபமெல்லாம்
சுண்ணமடா யின்னுமொன்று சாற்றக் கேளே. 262.

பஞ்சலோக செந்தூரம்.

கேளடா பஞ்சலோக செந்தூரந்தான்
57. அ. கெடியான தங்கமொடு வெள்ளி செம்பு
நாளடா காந்தமொடு யிரும்பு அந்த
நலமாக அத்திசெய்து
வேளடா கெந்தகந்தான் ரெட்டிப் பிட்டு
வெகுளாதே சூதமதை வீரம்பி காலதான்
ஆளடா முப்பூவின் சுண்ணமொன்று
அப்பனே பழச்சாறான் சாமம் ஆறே. 263.

264. அரைத்த விழுதை உலரச் செய்து ஓட்டிலிட்டு மேலே ஓட்டினைக் கொண்டு மூடி அதற்கேற்ப சீலைமண் செய்து முழு புடத்தில் வைத்து எரித்துக் கொள்ளவும். ஆறின பிறகு எடுத்துக் கரிசாலைச் சாற்றால் 12 மணிநேரம் அரைத்து அவ்விழுதை முழு அளவு புடத்தில் வைத்தெரிக்க செந்தூர-மாகும். மீண்டும் ஆறின பிறகு எடுத்துச் செருப்படைச் சாற்றால் 12 மணிநேரம் அரைத்துக் கொள்ளவும்.

265. அரைத்த விழுதை முழு புடத்தில் வைக்க செந்தூரமாகும். இந்தச் செந்தூரத்தை 488 மி.கி எடுத்து திரிகடுகுச் சூரணத்தைத் துணை மருந்தாகக் கொண்டு தேனில் கலந்து உண்ண வேண்டும். இவ்வாறு 48 நாட்களும் உட்கொள்ள எண்பது வகை வாயுவும் பித்தத்தின் மூலமும் இருபது வகை சேத்துமங்களும் குணமாகும்.

மண்டூர செந்தூரம்

266. ஆயிரம் வருடம் பழைமையான கிட்டத்தை எடுத்து, கோமியத்தில் காய்ச்சிப் பத்து முறை தோய்த்தெடுத்துப் பொடித்துக் கல்வத்தில் வைத்துக் கொள்ளவும். கெந்தகம், சூதம், லிங்கம், வெண்காரம் இவற்றைப் பத்தில் ஒரு பாகம் எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

நாலாமாம் அரைத்துமே அவர வைத்து
நன்றாக மூட்டிவிட்டு கோடு மூடி
சீலான சீலைசெய்து புடமிட்டத்தின்
தெண்ரேதா ரைர்றினபின் னெடுத்துக் கொண்டு
காவான கரிசாலை சாற்றி லாட்டி
கலக்காம வச்சாம மரைத்துக் கொண்டு
வேலான புடமிட்டத்தின் செந்தூர மாகும்
கிருதான செருப்பணைதான் சாமம்னா லாட்டே
264.

ஆட்டியே புடமிடத்தின் செந்தூரந்தான்
அருணனைப்போன் நிறமாகும் எடுத்துக் கொண்டு
மூட்டியே திரிகடுகிற் பணவிடைதான் கொள்ள
மூதண்டத் தேன்கூட்டி மண்டலந்தான் கொள்ளு
நாட்டியே வாயுவென்ற தெண்பதும் போம்
நாடாது பித்தத்தின் மூலந் தீரும்
காட்டியே சேத்துமங்க ளிருபதும் போம்
கருவாக யண்ணமொன்று கருதிக் கேளே
265.

மண்டூர செந்தூரம்,

கோடா ஆயாரந்தான் வருசெந் தென்ற
கொடியான கிட்டமது கொண்டு வந்து
தாடா ஆவினீர் தன்னி லேதான்
தளமாக்க் காச்சியே ~~[illegible]~~ (~~[illegible]~~) வைத்த
வேடா பத்துவிசை துவைத்து கொத்த
78.அ. விருதான கல்வத்திற் பொடியாய்ச் செய்து
நாடா பத்திலொன்று கெந்தி சேரும்
நலமான லிங்கம்பூ வெண்காரங் கூட்டே
266.

267. எருமிச்சம் பழச் சாற்றால் அரைத்துப் பத்து முறை புடம் போடவும். பிறகு கரிசாலைச் சாற்றால் அரைத்துப் பத்துமுறை புடம் போடவும். அரசம் பட்டைச் சாற்றால் அரைத்து ஐந்து புடம் போட்டு ஆறின பின் எடுத்துப் பார்க்க செந்தூ-ரமாய் ஆகி இருக்கும். இதனைப் பொடிசெய்து பரணியில் அடைத்துக் கொள்ளவும்.

268. திரிகடுகு சூரணத்தைத் துணை மருந்தாகக் கொண்டு இந்தச் செந்தூரத்தை 975 மி.கி அளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ள விஷப்பாண்டு, ஆறுவகைக் காமாலை, பாண்டு வகைகள், பித்த வகைகள், தொண்ணூற்றாறு வகை சிலேத்தும நோய்கள், கடலுக்குள் புகுவது போல் காணாது போய்விடும். வெளுத்துப் போன உடல் இயல்பாய் மாறும்.

269.

உணவில் வெறுப்பு, உணவுத்தோடம், தொடர்ந்து தொல்லை கொடுக்கும் வாந்தி, விக்கல், வாயு, நிற தோடங்கள் ஆகியவை தீரும். உடல் பொன்னாகும். வன்மையுடன் திகழும். இவ்வாறு பெற்ற அநுபவங்களைத் தெரியுள்ளோம். அப்பிரகச் செந்தூரம் செய்முறை வருமாறு

கூட்டியே பழுக்காறில் புடந்தான் பத்து
கூசாதே தரிசானை புடந்தான் பத்து
நீட்டியே அருக்கூட புடைச் சாற்றில்
நேராக புடமஞ்சு போட்டே நீத்துக்
காட்டியே செந்தூரம் பொடிதான் செய்து
கண்மானே பணிதனை எடைத்துக் கொள்ளே. 267

கொள்ளவே திக்கெட்டு தேணி கேள்தான்
கூசாதே பணம்ரெண்டு கூட்டிக் கொள்ள
விள்ளவே விதைப்பாண்டு காமாலை யாவும்
விருதான பாண்டுவகை ஓடிபோ மப்பா
தள்ளவே பித்தமென்னாம் கிடே சூடும்
தளமான சேத்துமநோய் தொண்ணூத்தாறும்
கள்ளவே கடன்புக்கும் காணா தோடும்
கண்டாயோ வெண்பாண்டு கரும்பாண்டு மாதே. 268

ஆமப்பா அரோசியங்க் என்ன தோஷம்
ஆகாமை நீங்காத வாந்தி விக்கல்
நாமப்பா வாயுவென்ற தெல்லாம் போகும்
நலமான நிறதோஷம் நாடா தோடும்
காமப்பா ஆகுமடா தேக மின்னுஞ்சி
களைத்த தேகமது யாருக்கிப் போகும்
நாமப்பா கண்டபடி சொன்னோ மின்னும்
நலமான அப்பிரகம் சொல்லக் கேளே. 269

270. ## அப்பிரகச் செந்தூரம்

கிருஷ்ண அப்பிரகத்தைப் பசும்பாலில் காய்ச்சிக் கழுவி, அதை எடுத்து நெல்லோடு கலந்து பின்பு காடி ஊற்றிப் பிசைந்து பாத்திரத்தில் அப்படியே வைக்கவும். மறுநாள் எடுத்துப் பார்த்து மேலே நிற்கும் தெளிவினை இறுத்து அப்பிரகத்தை வெயிலில் வைத்து உலர்த்தவும்.

271. நன்கு உலர்ந்த பிறகு எடுத்துக் கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச் சாற்றால் 12 மணிநேரம் அரைத்துக் கொள்ளவும். பத்தில் ஒரு பாகம் கெந்தகத்தைச் சேர்த்து வில்லைகளாய்த் தட்டி வெயிலில் வைத்து உலர்த்திக் கொள்ளவும். முப்பது எரு வறட்டிகளை அடுக்கிப் புடம் போட்டெடுக்கவும். ஆறின பின் எடுத்துக் கெந்தகத்தைக் கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றால் 12 மணிநேரம் அரைத்துக் கட்டிக் கொள்ளவும்.

272. கட்டியை வெயிலில் வைத்துக் காய வைத்து மூட்டியிட்டு முப்பது எருவில் புடம் போடவும். ஆறின பின் எடுத்துக் கெந்தகத்தைச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துப் பத்து முறை புடம் போடவும். ஆறின பின் எடுத்துக் கரிசாலைச் சாறூற்றி அரைத்துப் பத்து புடம் போட்டு எரிக்கவும். மறுபடி எடுத்துச் செருப்படிச் சாறு விட்டு 12 மணிநேரம் அரைக்கவும்.

அப்பிரகச் செந்தூரம்

சொல்லக்கேள் கிருஷ்ண அப்பிரகம் வாங்கி
சிறுக்காகக் காய்ச்சியே பாலில் போட்டு
வெல்லக்கேள் கழுவியதை எடுத்துக் கொண்டு
வாகான நெல்லோடு அப்பிரகங் கலந்து
நல்லக்கேள் காடியிலே பிசைந்தா யானால்
79. அ. நன்மான அப்பிரக மிறங்கும் பாரு
தின்னக்கேள் மறுநாள்தான் தெளிவை நீக்கி
சிறந்தான அப்பிரகம் நிழலில் போடே.
270.

போடப்பா உலர்ந்தபின்பு எடுத்துக் கொண்டு
புகழான கல்வத்தில் போட்டு நீயும்
ஆட்டப்பா பழச்சாறால் நாலு சாமம்
அப்பனே பத்திலொன்று கெந்தி கூட்டு
நாட்டப்பா வில்லைதட்டி நிழலில் தேறன்
நலமான முப்பதுரு புடத்தில் போடு
நீட்டப்பா கெந்தியிட்டு பழச்சாறாலே
நேராக நான்சாம மரைத்துக் கட்டே.
271.

கட்டியே நிழலிலே காய்ந்தபின்பு
கனமான ஓட்டிலிட்டு புடத்தை போடு
ஆட்டியே கல்வத்தில் போட்டு நீயும்
ஆ. அப்பனே கெந்தியிட்டு பழச்சாற்றா லாட்டி
மாட்டியே பத்துவிசை புடத்தில் போட்டு
பாங்கான பின்னெடுத்துக் கரிசாலை சாற்றில்
வாட்டியே புடம்பத்தும் போட்டெடுத்து
வாகான செருப்படிச்சார் விட்டு ஆட்டே.
272.

273. அரைத்த விழுதை வில்லைகளாக்கி உலர
வைத்துப் பத்து புடம் போட்டெடுக்கவும்.
பிறகு ஆறின பிறகு எடுத்துப் பொடுதலைச்சாறு
ஊற்றி அரைத்துப் பத்து புடம் போடவும்.
பிறகு பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றால்
அரைத்து ஐந்து புடமும், செருப்படைச் சாற்றினால்
அரைத்து ஐந்து புடமும், முருக்கம்பூ சாற்றினால்
அரைத்து ஐந்து புடமும் போட்டெடுக்கவும்

274. அருணா சிலேல்வரதின் நிறத்தை ஒத்து
செந்தூரம் சிவப்பாகத் தோற்றமளிக்கும். இந்தச்
செந்தூரத்தை பதுக்கி எடுத்துத் துணை மருந்தாக
சஞ்சீவி சூரணத்தைக் கலந்து தேனில் உட்கொண்டால்
எட்டு வகைச் சயம், இளைப்பிருமல், சிலேத்தும
நோய் தொண்டைநோய், மேகநீரிழிவு ஆகிய
நோய்கள் தீரும்

275.

உள்மாற்றை, இருபது வகைப் பிரமியம்
உடலினுள் ஏற்படும் உள்சூடு, உள்ளெரிச்சல்
அனல் அதிகமாதல், தோஷம் போன்ற நோய்கள்
குணமாகும். விந்துக்கள் ஊறிப் பெருகி
தாது விருத்தியாகும். எலும்புருக்கி உடலை
அண்டாது. வெப்பம் குறைந்ததால் கண்
குளிர்ச்சியாகும். உடல் பொன் போல் மினுரும்.
இனி பற்ப வகைகளைக் காண்போம்.

ஆட்டியே யிருக்காமம் உரை வைத்து
அப்பனே படம்பத்திப் போட்டை நத்தி
நீட்டியே பொருத்தணைத்தார் படந்தான் பத்தி
நேரான ~~படந்த~~ பொற்தலையன் படந்தானத்து
காட்டியே செருப்படி ஆற்றி னாலே
கதகாமன் படமத்து போட்டை நத்தி
மாட்டியே முருக்கம்பூ ஆற்றி வாட்டி
மைந்தனே படமத்து போட்டுக் கொள்ளே
273.

80. அ. கோப்பா செந்தூரம் அருணன் போலாம்
செந்தான அனுமனை மறந்து கொள்ளு
வின்னப்பா சியமெட்டு யானைப்புருமன்
விருதான கேட்டநாய் சொன்னதார் தாருந்
கன்னப்பா பயந்தோடும் கடலே புக்கிருந்
கருவான சந்தீவி நீ3 வாத்தில்
அன்னப்பா பணவிடைதான் தேனிக்க கொள்ள
அத்துப்போடம் மேகநீ ரிழந்து போகேம.
274.

போமப்பா தேகவன் மாந்தை யெல்லாம்
போமடா பிரமியனோ யிருப்ப தாந்தான்
சாமப்பா உள்ளேடு உள்ளொளிவு காந்தம்
நிலையான தோஜமன்னாய் இனிச்சி யாகும்
ஆ வேமப்பா. விந்தூரம் புகட்டி யாகெத்
வேகினானை யெழும்புக்கி வழுவாய்ப் பெறும்
காமப்பா கண்ணினிருந்த தேத மின்னும்
கருவான பார்வைகை சொல்லக் கேளே.
275.

துருசு பற்பம்

276. சொல்லக்கேள் புலத்தியனே! துருசு பற்பம் செய்யும் முறையைக் கேட்பாயாக! துருசினை எடுத்து மூன்று நாள் உப்பு நீராலும் மூன்று நாள் எலுமிச்சம்பழச் சாற்றாலும் சுத்தி செய்து வெயிலிலே உலர்த்தி 35 கி எடுத்துக் கொள்ளவும். தங்கத்தின் தகடை எடுத்து சுண்ணத்தினால் ஊதி துருசின் எடைக்குச் சம அளவு கவசமாகப் போடவும்.

277. ஏழுநாள் வெயிலில் காய வைத்து சுண்ணம் தடவப்பட்ட சீலைத்துணியை மூன்று முறை சுற்றி உலர வைத்து மூன்று எரு வறட்டியிலே புடமிட்டெரிக்க குருவாகும். அதனைச் சிமிழுக்குள் பத்திரப்படுத்தி வைக்கவும். இதில் பத்தில் ஒரு பாகத்தை எடுத்து வெடியுப்புத் திராவகம் அல்லது தணைப்பூண்டு செயநீரால் அரைத்து வில்லைகளாய்ச் செய்து வெயிலில் உலர்த்தி ஓட்டில் வைத்துப் பத்திரப்படுத்தவும்.

278. ஓட்டிற்கு கீழும் மேலும் கல்சுண்ணத்தை வைத்து நடுவில் வில்லைகளை அடுக்கி மூன்று எரு வறட்டியினை ஈண புடத்தில் வைத்தெரிக்க பற்பமாகும். இந்தப் பற்பத்தைப் பரணியில் அடைத்து வைத்துக் கொள்ளவும். இந்தப் பற்பத்தில் மி.கி எடுத்து நெய் அல்லது தேனில் கலந்து கொடுக்க முடக்குச் சூலை, கால் குலை தீரும்.

துருசு பற்பம்.

சொல்லக்கேள் புலத்தியனே பற்பத் துக்கு
அருக்கான துருசுவொன்று சொல்லக் கேளு
வெல்லக்கேள் துருசுசுத்தி பண்ணிக் கொண்டு
வகையான அப்புநீர் மூன்று நாள்தான்
அல்லக்கேள் ஆரநீர் மூன்று நாள்தான்
அழகான நவியுர்த்தி பலமே தாக்கி
மெல்லக்கேள் தங்கத்தகடு அண்ணா மூடி
வாகாக யிடைக்கிடைதான் கவசம் போடே.
2.76.

போடப்பா நவியாலே யெழு நாள்தான்
81. அ புகழாகக் காய்ந்தபின்பு அண்ணாந் தீளை
நாடப்பா மூன்றுசுத்தி ஆய வைத்து
நலமான காடையாலே இருவு மாகும்
பாடப்பா திமிருக்கின் பதனம் பண்ணு
பார்க்கிறதோர் சூதத்துக்கு பத்தி யொன்று
நீட்டப்பா வாயநீர் வளைத்து வில்லை
நிஜமாக நவியுர்த்தி ஓட்டில் வையே.
2.77

வைய்யப்பா கீழ்மேலுஞ் சல்லு அண்ணாந்
வகையாக நடுவில் - வில்லை வைத்து மூடு
செய்யப்பா வில்லையது மூன்றுள் செய்து
திறமான குக்குடத்தில் பற்ப மாகும்
மெய்யப்பா சிபற்பம் பரணி - தன்னில் வைத்து
ஆ விந்தாக நெய்தேனில் பனைந்தா லுண்ணு
கைய்யப்பா காலோடு முடக்கிச் சூலை
கண்ணான தொடுமட்டா மின்னாங் கேளே 2.78

௨79. சர்வாங்க வாந்தி, எட்டு வகைக் குன்மம், இசிவு, பதின்மூன்று வகைச் சன்னி, கபாலக்குத்தை, தலையைச் சார்ந்த நோய்கள், கெர்ப்ப நோய் ஆறுவகைகள் ஆகிய நோய்களும் துருசு பற்பத்தால் குணமாகும்.

வெடியுப்புக்குறைவாக அல்லது திணைப்பிண்ண — செயநீரால்

௨80. தாளக பற்பம்

தாளகத்தைத் முறைப்படி சுத்தி செய்து எடுத்துக் கொள்ளவும். இரசபற்பத்தையும் துருசு பற்பத்தையும் ~~[illegible]~~ அரைத்துத் ~~[illegible]~~ தாளகத்தின் பரப்பளவுக்குச் சமமாகப் பூசி வெயிலில் வைத்து உலர்த்திக் கொள்ளவும். சுண்ணச்சீலை மூன்றினைச் சீலைமண்ணாகச் சுற்றி சுண்ணத்தில் வைக்கவும். பத்து எருவராட்டியினால் ஆன புடத்தை அமைத்து எரிக்கவும் பற்பமாகும்.

௨81.
இந்தத் தாளக பற்பத்தை 45 மி.கி எடுத்துத் தேனில் கலந்து உட்கொள்ள எட்டு வகைச் சயம், இளைப்பு, ஈளை, சிலேத்தும நோய் தொண்ணூற்றாறு வகை, பிரமிய நோய், எலும்பு நோய், எலும்புருக்கி ஆகிய நோய்கள் குணமாகும்.

கேளடா சர்வாங்க வாந்தி தீரும்
கொடியான இன்மைநோய் யெட்டுந் தீரும்
பாரடா யஜீரணத்தின் பறந்து போகும்
பறக்குமே சன்னியென்ற பதிமூன்றுந்தான்
கேளடா குத்தியஞ்சோர் கபால சூலை
தெறிகெட்டு ஓடுமே சிரசூல யென்னவே
வாளடா தேகமது பிளந்துப் போகும்
மகத்தான கொப்பமதை யாமறிந்தானே. 279.

82. த. தாளக பற்பம்.

மாறுமே யின்னமொன்று மகிழ்ந்து கேளு
வகையான தாளகமும் சுத்தி செய்து
வீறுமே நீசபற்பம் தாக்கி நீறும்
விருதாக வாய்நீரா லரைத்துக் கொண்டு
சாருமே அமணத்தா லகத்துக் கப்பி
தீறாக நவியுறத்தி சன்னாச் சீலை
சீருமே மூன்று செய்து அன்னத்தின் வைத்து
திறமான இக்கடத்தின் சிவன்போல் வாகே. 280.

அடப்பா மான்தேவி பற்பம் தன்னை
அவைவாகத் தேனிலொரு பணமே யுண்ண
வெடப்பா சயமுட்டுத் பிணைப்பு யீளை
விருதான சேத்துமநோய் தொண்ணூற் றாறும்
சாமப்பா பாண்டுநோய் யென்பதாந் தீரும்
சடத்திலே சயனோயும் தீரும் தன்னை
சாமப்பா வெகும் புருத்தி அன்றி கோமாலைகள்
கண்ணான தொடுமடா யின்னம் கேளு. 281.

வங்க பற்பம்

282. வங்கத்தைச் சுத்தி செய்து மெல்லிய தகடாகத் தட்டிக் கொள்ளவும். தாளகத்தையும் ரசத்தையும் சம அளவெடுத்து உமிழ்நீரால் அரைத்து வங்கத் தகட்டின் மேலே சமமாகப் பூசி வெயிலிலே உலரச் செய்து வைக்கவும். பிறகு அதற்குச் சுண்ணாம்பு சீலையைச் சீலை மண்ணாக சுற்றி வைக்கவும்.

283. சீலை மண் ஆறினபின் 1½ அடி நீளமும் 1½ அடி அகலமும் உள்ள குழியை வெட்டி அதில் எரு வரட்டிகளை அடுக்கிப் புடமிட்டு எடுக்க வங்கமானது பற்பமாகும். இந்தப் பற்பத்தில் 488மி.கி எடுத்து திரிபலைச் சூரணத்தில் குழைத்து உட்கொள்ள வேண்டும். இவ்வாறு பத்து நாட்கள் கொள்ள பிரமியம், பிரமேகம், எலும்புருக்கி தீரும்.

284. நாற்பத்து கிரந்தி வகைகளும், வரட்சி -யுடன் கூடிய சொறிசிரங்கு, உடலில் அரிப்பெடுத்தல், சில்விரணங்கள், ~~வாதகுன்மை~~ ஆகியவையும் இந்த வங்கபற்பத்தால் குண -மாகும். வாதகுன்ம வகைகளைத் தீர்க்கும் நாக பற்பம் செய்முறை கீழ் வருமாறு.

வங்க பற்பம்

கேளடா வங்கத்தைச் அத்தி பண்ணி
கெடியாக வேசாகத் தகடு போட்டு
தாளடா தாளகமும் நஞ்சும் கூட்டி
அமனாக வாய்நீரா லரைத்துக் கொண்டு
வாளடா வங்கமென்ற தகட்டி லேதான்
வளமாக பூசவாய் அமன்னாய் நீயும்
ஆளடா நவியிலே அவரப் போட்டு
அப்பனே அண்ணாம்பு தீனை அத்தே.
282.

அத்தியே அண்ணாம்பு தீனை செய்து வைத்து
அகமாக முழுபுடத்தில் நீறிப் போகும்
மத்தியே வங்கமென்ற பற்பந் தன்னை
வரிசையாய் திரிபலையின் குடநீரில்
83அ அத்தியே பணவிடைதான் குழைத்துக் கொண்டு
கொண்டுவர பத்துநாள் தீரும் நோய்கேள்
வத்தியே பிரமியமும் பிரமே காங்கை
வளருகிற வெதும்புருக்கி மாண்டு போமே.
283.

மாண்டுபோம் கிரந்தியொடு சூத்து பத்தும்
வறட்சியொடு சொறிசிரங்கு மாண்டு போகும்
மாண்டுபோ மேனியதில் படர்ந்த உளதில்
வலுவான சில்விஷங்கள் மாறிப் போகும்
மாண்டுபோம் வாதமென்ற குணமெல்லாம்
வகையாக நாகத்தின் பற்பங் கேளே.
284.

285. நாகபற்பம்

நாகத்தை முறைப்படி சுத்தம் செய்து இலேசான வில்லையாகச் செய்து கொள்ளவும். தாளகபற்பத்-தையும் வங்க பற்பத்தையும் சமமாக எடுத்து வெடியுப்புத் திராவகம் அல்லது தனைப் பிண்ட செயநீர் விட்டரைத்து வில்லையின் மீது பூசிக் காய்ச்ச வேண்டும். சுண்ணாம்பு சீலை-யைச்சுற்றி சுண்ணாம்புக்குள்ளே வைக்கவேண்டும்.

286. 1½ அடி நீளமும் 1½ அடி அகலமும் உள்ள குழியை வெட்டி அதற்குள் எரு வறட்டிகளை அடுக்கி சீலைமண் செய்து வைத்த நாக வில்லையை வைத்துப் புடமிட்டெடுக்கவும். நாகம் பற்பமாகும். சுக்கு, மிளகு, திப்பிலி தாளிசபத்திரி, இலவங்கம், இவற்றைச் சமமாய் எடுத்து வெயிலில் காய வைத்துச் சூரணம் செய்து கொள்ளவும். வடிகட்டித்தூய்மை செய்த சூரணத்துடன் [illegible] கி நாகபற்பத்தையும் கலந்து தேனில் குழைத்துச் சாப்பிட தொண்ணூற்-றாறு வகை சிலேத்தும நோய் தீரும்.

287. எண்பது வகை வாதம், நாற்பது வகை பித்தம், மேகம், குலை வகைகள், குட்டம், எட்டு வகை, கடி விரணங்கள், ஆண்குறி, பெண்குறி எரிச்சல், குன்மவகைகள், ஆகிய நோய்கள் குணமாகும்.

(~~நாக பற்பம்~~) நாக பற்பம்.

அ. தேனப்பா நாகத்தைச் சுத்தி பண்ணி
தெளிவாக வேதாக விதனை செய்து
தானப்பா தாளகமும் ஆக்க பற்பம்
சமனாகத் துக்கிடையே தூக்கி
வானப்பா வாய்கீரா அரைத்துக் கொண்டு
வளமாக வில்லைமேற் பூசிக் காச்சி
~~வானப்பா வாய்கீரா அரைத்துக் கொண்டு~~
~~வளமாக வில்லைமேற் பூசிக் காச்சி~~
வானப்பா அன்னாம்பு சீலை அற்றி
அத்தமாம் அன்னாம்புக இள்ளளவையே 285.

வைத்து முழுபுடத்தின் நீறாய்ப் போகும்
வாதகிதா ணிரம்பின் சொல்லக் கேளே
அத்தப்பா திரிகடுகு தானச பத்திரி
அருவான எவ்வெவ்வழுந் அமுரியாய்க் கூட்டி
பத்தப்பா நாவனே ஓர் ணிதத்தில்
பதறாதே புடமெய்து கியும் —
எத்தப்பா பணவிடைதான் கிதென்று கொண்ணாலே
எழுந்தோர் சேர்த்திடும் நோய் தொண்ணுறு 286.

பு.அ
ஆறான பெருக்குமென்ன மத்துப் போகும்
அறுப்பனை வாதமது எண்ப தும்போம்
வீறான பித்தமது நாற்ப தும்போம்
வெகுஇருக்காய் மேகமொடு பிணை தீரும்
தூறான குஷ்டமொடு பட்டுந் தீரும்
தொமான கழலை வெடிப்புகள் தாமா தேவுக்கே
கூறான குறையாப்பு மிகுந்து தீரும்
இன்னமொடு பிணை-முதல் அத்தோம் பாரே 287.

வெடியுப்புத் திராவகம் அல்லது திலைப்பிரண்டை — தெயநீர்

தாமிர பற்பம்

288. தாமிரத்தை எலுமிச்சம் பழச் சாற்றில் பதினைந்து முறை சாய்த்துச் சுத்தி செய்து பின் லேசான தகடாகத் தட்டி வைத்துக் கொள்ளவும். நாகபற்பத்தையும் தாளகத்தையும் சம அளவு சேர்த்து ~~உமிழ் நீரின்றி~~ அரைத்து அவ்விழுதைச் சமமாகத் தாமிரத் தகட்டின் மீது பூசி வெயிலில் வைத்து உலர்த்தவும். பின் அதற்கு சுண்ணத் -திவண சீலைமண் ~~செய்~~ சுற்றிச் சுண்ணத்தில் வைக்கவும்.

289. 800 எரு வறட்டிகளைக் கொண்டு அமைத்த புடத்தில் தாமிரத்தை வைத்து எரிக்க தாமிரம் பற்பமாகும். இந்தப் பற்பத்தைத் தக்க அனுபானங்களில் அறிந்து கொடுக்க எட்டு வகைக் குன்மம் மற்றும் பதினெட்டு வகை குவையும் குணமாகும். திரிகடுகுச் சூரணத் -துடன் இந்தப் பற்பத்தைத் தேனில் கலந்து உட்கொள்ள ~~[illegible]~~ இருமல், ஈளை, குணமாகும்.

வெடியுப்புத் திராவகம் அல்லது திலைப்பிரண்டை — தெயநீர்

வெள்ளி பற்பம்

290. வெள்ளியைத் தகடாகத் தட்டிக் கொள்ளவும். இரசபற்பம், வங்க பற்பம், நாக பற்பம் இவற்றைச் சம அளவு எடுத்து ~~உமிழ்நீரால்~~ அரைத்து ~~[illegible]~~ வெள்ளிக் -குச் சம அளவெடுத்து தகட்டின் மீது சமமாய்ப் பூசி வெயிலில் வைத்துலர்த்திச் சீலை மண் செய்து சுண்ணாம்புக்குள் வைத்து 800 வறட் -டியினால் ஆன புடத்தில் இட்டெரிக்கவும். பற்பமாகும்.

தாமிர 14

~~தாம்பூர~~ பற்பம்

பாரப்பா தாம்பூரம் பழுக்காச்சி திரிதோன் (நிலே)
பதறாதே பதினைந்து திரமே காய்ச்சு
நேரப்பா வேர்ப்பாக தகடு தட்டி
நிறைவாக நாகபற்பம் தானழஞ்சு கூட்டி
ஆ. சாரப்பா வாய்நீரா லரைத்துக் கொண்டு
அமைவாகத் தாம்பூரத் தகட்டில் பூசி
ஆறப்பா நவியுரத்தி அண்ணைச் சீலை
அப்பனே அத்தியே அண்ணத்தின் வையே.
௨௮௮.

வைத்தப்பா கஜபுடமாய்ப் போட்டெடுக்க
வாகான தாம்பூரம் பற்ப மாகும்
கைத்தப்பா வெகு அருக்கம் தாம்பூர பற்பம்
காணப்பா அனுபானம் மாறுது போடு
இத்தப்பா இன்மைபட்டு ஜீவைபதி சைபடும்
இதுபோகுந் திருகுடுகு தெனிக் கொள்ளா
சித்தப்பா யாருமவரோடு யீல்லை யென்றே
இனிப்போம் வெள்ளியுட பற்பங் கேளு
௨௮௯

வெள்ளி பற்பம்.

85. ஆ கேளப்பா வெள்ளியைத் தகடு தட்டி
கெடியாக நாகபற்பம் வாங்க பற்பம்
நாளப்பா நாகமொடு மூன்று ஒன்றாய்
நலமாக வாய்நீரா லரைத்துக் கொண்டு
வேளப்பா வெள்ளிக்கு அமைவாய்ப் போட்டு
விருதான நவியுரத்தி சீலை செய்து
சூளப்பா அண்ணாம்புக் கின்னாெ வைத்துத்
திடமாக முன்புடத்தில் தாக்கி வாங்கே.
௨௯௦.

291. வெள்ளி பற்பத்தை 488 மி·கி அளவெடுத்துத் தேனில் கலந்து உட்கொள்ள கல்லடைப்பு, சதையடைப்பு, கிரிச்சனங்கள், காசம், ஈளை, லிங்கப்புற்று, யோனிப்புற்று, அக்கிரந்தி, மேகம் ஆகிய நோய்கள் தீர்ந்து உடல் நலம் பெறும்.

292. தங்க பற்பம்

35 கி தங்கத்தை எடுத்துத் தகடாகத் தட்டிக் கொள்ளவும். எலுமிச்சம்பழச் சாற்றில் பூரங்காவியைச் சேர்த்தரைத்து அந்தத் தங்கத் தகட்டின் மீது பூசிக் காய்ச்சிக் கொள்ளவும். இவ்வாறு ஐந்து முறை காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். நாகபற்பம், வங்கபற்பம், ரசபற்பம், வீரபற்பம், வெள்ளி இவற்றைச் சமமாய் எடுத்து முட்டையின் நீரால் அரைத்துக் கொள்ளவும்.

293.

அரைத்த விழுதைச் சம அளவாக அல்லது சமமாகத் தங்கத் தகட்டில் பூசி வெயிலில் வைத்து உலர்த்திக் கொள்ளவும். பிறகு கால் பங்கு வீரத்தைச் சேர்த்து முட்டையின் நீரால் அரைத்து வெயிலில் வைத்து உலர்த்தி அதை மேற்சொன்ன நீற்றில் வைத்துப் பின் ஒரு அளவுள்ள புடத்தில் அமைத்து அதற்குள் வைத்தெரிக்கவும்.

வாங்கியே பற்பத்தைப் பதனம் பண்ணு
வாகாய் பணவிடைதான் தேனிற் கொள்ள
தேங்கியதோர் கல்லடைப்புச் சதைய டைப்பு
தீராத கிரிச்சங்கள் தீரும் தீரும்.
யோங்கியதோர் காசமொடு யீளை திருந்து
யீளைக்குமே விளங்கப்பத்தி யோனிப் புத்தி
பாங்கியே அக்கிரந்தி மேக மென்லாம்
பாக்கும்டா பின்னமொரு பற்பங் கேளு 291

தங்க பற்பம்

ஆ கேளப்பா தங்கமொரு பலந்தான் வாங்கிக்
கிருமைபாய்த் தகடுதட்டி சொல்லக் கேளு
நாளப்பா பழச்சாற்றில் பூரங்காவி யாட்டி
நலமாகத் தகட்டுமேல் பூசிக் காய்ச்சி
தாளப்பா அதுஅதிற் காய்ச்சிக் கொண்டு
திறமான நாகபற்பம் வங்க பற்பம்
கேளப்பா ரசபற்பம் வீரம் வெள்ளை
சேர்சமனாய் பண்டத்தி லீரா லாட்டே. 292

ஆட்டியே சமனாகத் தகட்டிற் பூசி
அப்பனே நவியல்த்தில் வீரங்கால் கட்டிக்

——— ——— ——— ———

இசைமான அண்டநீர் தன்னா லாட்டு
ஆட்டியே நவியர்த்தில் நீற்றில் வைத்து
சிறங்காய் முழைப்படத்தில் தாக்கி வாங்கே 293.

294. தக்க நேரங்கழித்து எடுத்துப் பார்க்க பற்ப
-மாயிருக்கும். தேன், நெய், சர்க்கரை இவற்றை அனுபானமாய்க் கொண்டு உட்கொள்ள வலிப்பு இளைப்பு, தொண்ணூற்றாறு வகை சிலேத்தும நோயும் எண்பது வகை வாத நோயும் பித்தமும் குணமாகும்.

295. பித்தவெட்டை, கிரஹணி, பெரும்பாடு, பிரமிய நோய், சூலை, இசிவு நோய், குட்டம், கிரந்தி, வெட்டைமேகம், உள்சுரங்கள், நீர்ச்சுருக்கு ஆகியவையும் இந்தத் தங்க பற்பத்தால் குணமாகும்.

296. வெண்கார பற்பம்

வெண்காரம், சிலாசத்து, மான்கொம்பு, கல்நார், இவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்
-துக் கொள்ளவும். பருத்தியின் சமூலத்தைச் சுட்டுச் சாம்பலாக்கி 1.300 கி.கி எடுத்து அதனுடன் 5.2லி தண்ணீரை ஊற்றிக் கலக்கி மூடி வைக்கவும்.

வாங்கியே யெடுத்துப்பார் வெண்ணீறாகும்
வளமான தேனதனில் சர்க்கரையில் கொள்ள
46.அ ஆங்கியே அன்னியென்ற மூல மென்பார்
தப்பாது தோஷமென்ற தோஷந் தீரும்
நீங்கியே வலிப்பிணைப்பு பறந்து போகும்
நினைவு கெட்ட சுத்தமேகநோய் தொண்ணூற்றாறும்
ஓங்கியே வாதநோய் எண்பதுந்தான்
சிதறிப்போகும் பித்தமது வொழிந்து போகும். 294.

அகன்றுபோம் பித்தவெட்டை கிராணி பெரும்பாடு
அடங்காத பிரமியநோய் ஓடிப் போகும்
ஒழிந்துபோம் சூலைமுதல் பசுவு ரோகம்
மேகோ அஞ்சுடமொடு கடுகே புக்கும்
ஒழிந்துபோம் கிருந்தியொடு வெட்டைமே கந்தான்
உள்ளாங்கள் நீர்க்கருக்கு ஓடும் பாரே 295.

வெண்கார பற்பம்.

பாரப்பா வெண்காரஞ் சிலாசத் துந்தான்
ஆ பங்காகக் கல்லுப்பும் கல்நாரந்தான்
சேரப்பா சமனாகப் பொடித்துக் கொண்டு
சீரான பருத்தியதன் சாறுவந்தான்
நேரப்பா அட்டதனைச் சாம்ப லாக்கி
நினைவாகப் பழையொன்று அரைத்துக் கொண்டு
பாரப்பா நாலுபடி சேர்ந்தான் விட்டு
வாகாக கலக்கியதை மூடி வையே. 296.

297. சிறிது நேரங் கழித்துத் தெளிவினை இறுத்து மேலே பொடித்த மருந்துடன் கலந்து ~~[illegible]~~ பனிரெண்டு மணிநேரம் அரைத்து வில்லை-களாய்ச் செய்து வெயிலில் வைத்து உலர்த்திக்-கொள்ளவும். உலர்ந்த வில்லைகளை ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் செய்து 1½ அடி நீளமும் 1½ அடி அகலமும் உடைய குழியில் வறட்டிகளை அடுக்கி எரிக்க பற்பமாகும்,

தொடர்ச்சி-யான பாடல் இல்லை.

வைத்தப்பா நாலுபடி தெளிவி நூத்து
வாகாக முன்மருந்தில் விட்டு ஆட்டி
கைத்தப்பா நாற்சாமம் மைத்து வில்லை
கணமான நிழலிலே புலரப் போடு
எய்த்தப்பா உடன்வைத்து ஓடு மூடி
உத்தமனே சீலைகட்டி புடப்புடத்தில்
நீத்தப்பா நீறியது வெள்ளை யாகும்
67.அ. நினைவாக பஞ்சமுந்த நீற்றா லாட்டே. 297

298-வது பாடல் இல்லை.

ஆட்டையானே சாரமது காசு போடு
அடங்காத இடையொரு காசு போடு
நாட்டியானே நாற்சாமம் மைத்துக் கொண்டு
நலமான வில்லைதட்டி நிழலில் உலர்த்தி
ஓட்டியானே அண்ணாம்பு பொடியன் வைத்து
அருக்கக முடிப்புடத்தில் இட்டு வாங்கே. 299

கோளப்பா பெருவயிறு மகோதர ரோகங்கள்
கிரிசணங்கள் கல்லடைப்பு சந்தைய டைப்பு
நாளப்பா நீரழிவு நீர்கத்தல் மேகம்
நாடாது கலிசையொடு நீராம் பல்தோன்
ஆளப்பா நீர்சுருப்பு அப்பா சாரங்கள்
எண்ணாத வயத்திலுள்ள நீர்க்கட்டுப் போகும்
? தோளப்பா நீர்க்கனத் துள்ளி விழுந்தால்
தீருமடா பவழமது பற்பம் கேளே. 300

பவளபற்பம்

301. 35கி பவளத்தைப் பீங்கானில் இடித்துப் போட்டு எலுமிச்சம் பழச்சாறு ஊற்றி 24 மணி நேரம் கழுவி எடுத்துக் கொள்ளவும். கற்பூர சிலாசத்தையும் பவளத்தின் அளவே எடுத்துக் கல்வத்திட்டுப் பிரண்டைச் சாறூற்றி அரைத்துக் கொள்ளவும்.

302. பன்னிரண்டு மணி நேரம் அரைத்து வில்லை -களாய்த் தட்டி வெயிலில் உலர்த்திக் காய்ந்த பிறகு ஓட்டில் வைத்துத் தக்க ஓட்டினை மூடி 1½ அடி நீளமும் 1½ அடி அகலமும் உள்ள குழியில் வரட்டியினை அடுக்கிப் புடமிட்டு எரிக்க பற்பமாகும். இந்தப் பற்பத்தைப் பிரண் -டைச் சாறூற்றி அரைத்து மேற்படியே புடமிட -வும். மறுபடியும் அந்தப் பற்பத்தைப் புளியாரைச்சாறு விட்டு ஆறு மணி நேரமரைத்துப் புடமிட பற்பமாகும்.

303. இந்தப் பற்பத்தை 456மி.கி அளவெடுத்து வெண்ணையிலே கலந்து உட்கொள்ள மேகநோய் வகைகள் தீரும். எலும்புருக்கி, அஸ்தி மேகம், மதுமேகம் குணமாகும். இந்தப் பற்பத்தைத் தேனில் கலந்து உட்கொள்ள உடலில் ஊறல் நீங்கும் வாயுக்கள் அனைத்தும் கீழ் நோக்கிவிடும். மேகநோயால் காணும் தினவு நீங்கும்

பவள பர்வம்

தேனப்பா பவளமது பொந்தா னென்று
கெடியான பீங்கானில் நொறுக்கிப் போட்டு
வேளப்பா பழச்சாறு விட்டு நீயும்
விருதான நாழிகைதா னறுப தானால்
ஆ. நாளப்பா கழிவியதை யெடுத்துக் கொண்டு
நலமான கற்பூர சிலாசத் துந்தான்
தானப்பா சமனாகக் கல்வத் திட்டு
சாரமான பிரண்டைச்சார் தன்னா லாட்டு. 301.

ஆட்டியே நாற்சாமம் வில்லை தட்டி
அப்பனே ரவியதனில் ஓட்டிப் போடு
நாட்டியே முழுப்புடத்தில் நீறும் பாரு
நன்றாகப் பின்னுமந்த சாற்றா லாட்டு
காட்டியே ரவியதனில் புடத்தைப் போடு
கருவான பனியாறைச் சாற்றி லாட்டு
நீட்டியே யொருசாம மரைத்துக் கொண்டு
நினைவாகப் புடம்போட பற்ப மாமே. 302.

ஆமப்பா பணவிடைதான் வெண்ணையிலே கொள்ள
அடங்காத மேகமெல்லா மகன்று போகும்
வேமப்பா யெலும்புருக்கி அஸ்தி மேகம்
வருதான மதுமேகம் விட்டுப் போகும்
தாமப்பா தேனிலே கொண்டா யானால்
சகலமான மேலூறுந் தவறிப் போகும்
சாமப்பா வாயுவெல்லாம் கீழே சாடும்
தப்பாது மேகத்தின் தினவு போமே. 303.

சன்னிக்குத் தைலம்

304. சன்னி நோயைத் தீர்க்கும் தைலமொன்றின் செய்முறை கீழ்வருமாறு. வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், புன்னையெண்ணெய், பசுநெய், காட்டாமணக்கெண்ணெய் ஆகிய இவற்றைச் சம அளவு எடுத்துச் சட்டியில் ஊற்றிக்கொள்ள -வும். முசுறுமுட்டை — 3.5 கி, நல்லெண்ணெய் 3.5 மி.லி எடுத்துக் கொள்ளவும்.

305. கோழிமுட்டை — 10, மஞ்சள் 10 மேற்சொன்ன வற்றுடன் சேர்த்துக் கொள்ளவும். சாதிலிங்கம், கெந்திரசம், பசுங்காணம், நாபி, மிளகு, திப்பிலி, ஆனைத்திப்பிலி ஆகியவற்றை வகைக்கு 5 கி எடுத்துக் கொள்ளவும்.

306.

இலவங்கம், நேர்வாளம் இவற்றையும் 5 கி எடுத்து கொடிவேலியின் இலைநீர் விட்டு மூன்று மணி நேரம் அரைத்து அவ்விழுதை மேற்சொன்ன எண்ணெயில் கலந்து கொதிக்க விடவும். கொதிக்கும் போது எருக்கம்பால், கொடிக்கள்ளிப் பால், சதுரக்கள்ளிப்பால், இலைக்கள்ளிப்பால் ஆகியவற்றை வகைக்கு 3.5 மி.லி உடன் விடவும்.

88. அ. சன்னிக்குத் தைலம்

போமப்பா சன்னியெல்லாம் கடலே புக்கும்
புகழான தைலமொன்று சொல்லக் கேளு
நாமப்பா வேப்பெண்ணை புங்கின் எண்ணெய்
நலமான புன்னையெண்ணை பசுவு நெய்யும்
சாமப்பா காட்டாமணக்கி னெண்ணை
கருவாக அமண்சேர்த்து அட்டி வார்த்து
ஆமப்பா முசுமுட்டை பழச்சா வாங்கி
மப்பனே எண்ணைபடி காலதானமே. 304

சானான படியதனைச் சேர்த்துக் கொண்டு
காணப்பா இக்குடத்தின் முட்டை பத்து
மானான மருந்தைத்தான் இட்டு விட்டு
மயங்காதே கண்டமருந்து சொல்லக் கேளு
சானான சாதிலிங்கம் திரு நல்ல
அமுத்தான கெந்தித்துத்த பாஷாணந் தாணி
ஆனான நாபியொடு மிளகு திப்பிலி
அழகான ஆனையுட திப்பலியும் போடே 305.

ஆ போடப்பா வெங்காரமொடு நேர்வாளந்தான்
புகழான களாஞ்சிறு அமையக் கூட்டி
நாடப்பா சித்திரமூலக் கஷாயந் தன்னில்
நலமாகச் சாமமொன்று அரைத்துக் கொண்டு
சாடப்பா எண்ணையிலே கரைத்து விட்டு
சிறுக்க எரிக்கையிலே நெருக்கம் பாரு
கோடப்பா கொடிக்கள்ளி சதுரக் கள்ளி
இணையான யிலைக்கள்ளி பாலும் கூட்டே 306.

307. திருக்கள்ளிப்பால், நாணாங்கள்ளிப்பால், படர்ந்த கள்ளிப்பால், முள்ளிக்கள்ளிப்பால் இவற்றையும் வகைக்கு 32.5 மி.லி எடுத்து எண்ணெயிலே விட்டுக் கிண்டி விடவும் இரண்டு விறகு கொண்டு தொடர்ந்து எரிக்கவும். 175கி கஸ்தூரியைத் தாய்ப்பாலில் அரைத்துக் கரைத்து எண்ணெயிலே கலந்து கொள்ளவும்.

308. 32.5 மி.லி தாய்ப்பால், 32.5 மி.லி கழுதைப்பால் 35 மி.லி காட்டெருமைப்பால் ஆகிய மூன்றையும் ஆற்றலரி இலை நான்கையும் வெள்ளுள்ளி அரைத்த விழுதையும் எண்ணெயில் விட்டுக் காய்ச்ச வேண்டும். கொதித்தடங்கி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

309.

வடித்து வைத்த தைலத்தைப் பரணியில் அடைத்து அதில் கோரோசினையை 5கி போட்டுப் பத்திரப் படுத்தவும். பதின்மூன்று வகை சன்னிக்கும் ஒரு கரண்டி அளவு தைலத்தை உள்ளுக்குக் கொடுக்கவும். சன்னி தீரும். நரம்பிசிவு குத்து இவற்றிற்குத் துவாலையாக தைலத்தை உடம்பில் தேய்த்து விடவும். நரம்பெல்லாம் இலகுவாகி இசிவெல்லாம் தீர்ந்து நலம் பெறலாம்.

கூட்டவே திருடிக்கள்ளி நாணாக் கள்ளி
கூத்தாதே பார்த்திகள்ளி முள்ளிக் கள்ளி
சாட்டவே பால்வாக்காதா வழுக்கு மாகித்
சாதகமா யெண்ணையாலே வாட்டுக் கிண்டி
நீட்டவே கமலம்போல் தீயைப் போட்டு
முதிராமல் கொதிக்கையாலே கத்தூரி போடு
காட்டவே அஞ்சுவை முறைப்பா லாலே
தானைத்துக் கரைத்துத் யெண்ணையாலே வாரு
307.

99அ. வாரப்பா முறைப்பாந்தான் படிகான் வீதம்
வளமான தேசிப்பால் படிகா லாகும்
தேரப்பா ஆட்டெருமைப் பால்வந்தா லப்பா
திறமாக யெண்ணையிலே வாட்டுக் காய்ச்சு
ஆரப்பா அத்தவரி யரைநாள் போடு
அப்பனே வெள்ளுள்ளி யரைத்துப் போடு
நேரப்பா மெழுகுபத மானப் போதே
முன்னைவர்க்குப் பூசித்து வடித்தி டாயே.
308.

வடித்திட்ட தைலத்தை பரணிதனி லடைத்து
வாகாகக் கோரோசனை கழஞ்சி போட்டு
பிடித்திட்ட அன்னிவகை பதிமூன் றுக்கும்
பேரான கரண்டிதனை யுள்ளே கொள்ளு
அடித்திட்ட அன்னியென்ற தீவைந்து போகும்
அடியான யதுவித்து அவாளை போடு
நடத்திட்ட நரம்பெல்லா மிறுகு வாதி
நன்மையா மிகவைன்னும் நவின்ன மாமே. 309.

இரச செந்தூரம்

324. 17கி கெந்தியை எடுத்து சட்டியிலிட்டு எரிக்க உருகும். அப்போது 140கி ரசத்தை உடனிட்டெரிக்க பற்பம் போலாகும். புது செங்கலைப் பாக்கு போல் உடைத்து ஒரு பாண்டத்தில் போட்டு அதனுடன் 280கி கறியுப்பைச் சேர்த்துக் கொள்ளவும்.

325. கறியுப்புடன் மேற்சொன்ன பற்பத்தையும் சேர்த்து பாண்டத்தின் மேலே பானையைக் கவிழ்த்து மூடி அதன் வாய்ப்பட்டைக்குத் தக்கவாறு ஏழு சீலை மண் செய்து நன்றாகக் காய வைத்து அடுப்பில் ஏற்றவும். இரண்டு விறகினாலும் மூன்று விறகினாலும் பனிரெண்டு மணிநேரம் எரிக்கும் பொழுது மேல் கவிழ்த்த பானையின் உள்ளே பற்பம் சேர்ந்திருக்கும்.

326. 140கி இரசபற்பத்தையும் 17½கி கெந்தகத்தையும் 8கி அரிதாரத்தையும் சேர்த்துப் பொடித்துக் குப்பியிலே பாதி பாகம் போட்டு, அதன் வாய்க்கு ஏழு சீலை மண் செய்து வெயிலிலே உலர்த்திக் கொள்ளவும். தாழி ஒன்றுக்குள் நான்குவிரல் அளவு மணலைப் பரப்பி அதன்மீதுகுப்பியை வைக்கவும்.

இரசசெந்தூரம்

12. அ. பாரப்பா செந்தூரஞ் சொல்லக் கேளு
பண்பான கெந்தியதைப் பலந்தான் வாங்கி
நேரப்பா சூட்டிவிட்டு உருக்கும் போது
நேரான ரசம்பலந்தா னதுவு விட்டு
சாரப்பா வறுத்தாக்கால் பற்பம் போலாஞ்
சாதகமாய்ப் புதுசெங்கல் பாக்கிலோ அடைத்து
வாரப்பா பாண்டத்தில் போட்ட பின்பு
வளமான கரியுப்பு சேர்த்தான் வாங்கே. 324.

வாங்கியே முன்பற்பங் கல்லுப்புங் கலந்து
வாகாகப் பாண்டத்தி லடைத்து நீயுந்
ஆ தாங்கியே மேன்பாணை கவிழ்த்து மூடி
தப்பாமல் செழுசீலை மண்ணுஞ் செய்து
சாங்கியே காயவைத்து அடுப்பி லேற்றி
சாதகமாய் கமலாக்கினியி னாலே
தேங்கியே நாற்சாம மெரியூட் டாக்கால்
திறமாக செந்தூரம் பற்ப மாமே. 325.

ஆமப்பா சூதபற்பம் பலந்தா னாறு
அப்பனே கெந்திபல மதையுங் கூட்டி
நாமப்பா அரிதாரம் பலங்கால் தூக்கி
நலமாகப் பொடிசெய்து இப்பியிலே பாதி
வேமப்பா போட்டதிலே செழுசீலை செய்து
விருத்தன வேயிலிலே காயப் போட்டு
சாமப்பா தாழிக்கின் நாலுவிதன் மண்ணித்தான்
தப்பாமல் பூத்திமேல் இப்பி வைவையே
326.

327. குப்பியின் கழுத்து வரை மணலைக் கொட்டி
ஒரு விறகு, இரண்டு விறகு, மூன்று விறகு
கொண்டு பன்னிரெண்டு மணிநேரம் எரித்துப்
பின் ஆறவிட்டுப் பார்த்தால் தேங்காயினைப்
போன்று செந்தூர நிற்கும். இதனை எடுத்துப்
பத்திரப்படுத்திக் கொள்ளவும். இது நோய்களை
நீக்கும் தன்மை பெற்றது. இந்தச் செந்தூரத்தை
35 கிமும் மேற் பற்பத்தை 140 கிமும் எடுத்துக்
கொள்ளவும்.

328. கெந்தகம் 17 கி, அரிதாரம் 8½ கி. எடுத்து
முறைப்படி பொடித்துக் குப்பிக்குப் பாதியளவு
போட்டு ஏழு சீலை மண்ணும் செய்து
வாலுகையில் வைத்து அடுப்பிலேற்றவும்.

329. ஒரு விறகு கொண்டு நான்கு மணிநேரமும்
இரண்டு விறகு கொண்டு நான்கு மணிநேரமும்
மூன்று விறகு கொண்டு நான்கு மணிநேரமும்
எரிக்க செந்தூரமாகும். இவ்வாறே பத்து
முறையும் செய்து செந்தூரத்தை எடுத்துக்
கொள்ளவும். பற்பத்தை 140 கி,
அரிதாரத்தை 17½ கி எடுத்துக்கொள்ளவும்.

வைத்தப்பா கழுத்தளவு மணலைக் கொட்டி
வாகாக முத்தியுஞ் சாம நாலு
வைத்தப்பா எரியிட்டு ஆறிப் பார்த்தால்
துப்பாகு தேங்காய்போல் செந்தூர மாகும்
13. அ. வைத்தப்பா அடைத்தெடுத்துப் பணம் பண்ணு
நலமான வியாதியெல்லாம் நாடா தோடும்
சித்தப்பா செந்தூரம் பலந்தா னொன்று
அப்பனே முன்பற்பம் பலந்தா னாமே 327

நாலான கெந்திபல மொருதான் போட்டு
நலமான தாரங் கால் பலமு மாகும்
காலான கல்வத்தில் பொடித்து நீயும்
கதக்கமனி இப்பிக்கு அரையும் போட்டு
சேலான சீலையது வேழுஞ் செய்து
மைந்தனே வாலுகையி லடுப்பி லேற்றே
328

ஏற்றியே நாற்சாம முத்தீ யாட்டு
எடுத்தப்பார் செந்தூர மருணன் போலாம்
பார்த்தியே யப்படித்தான் பத்துமுறை செய்து
பாங்கான செந்தூர மெடுத்துக் கொண்டு
ஆ. தேற்றியே செந்தூரம் பலந்தா னாலு
திறமான பற்பமது பலந்தா னாலு
ஆற்றியே கெந்தியது பலந்தான் ரெண்டு
அப்பனே தாமது பலமைந்தா னாமே.
329

330. மனோசிலை லிங்கம் வகைக்கு 8¼ கி
எடுத்துச் சேர்த்துப் பொடித்து அதனுடன்
செம்பருத்திப் பூச்சாற்றை ஊற்றி பன்னிரெண்டு
மணிநேரமும் புரசம்பூ சாற்றை ஊற்றி பன்னி-
ரெண்டு மணிநேரமும் தக்காளியின் பழச்சாற்றை
ஊற்றி ஆறு மணிநேரமும் பொற்றலைக் கையாந்-
தகரையின் சாறூற்றி ஆறு மணிநேரமும்
~~331~~. அரைத்துக் கொள்ளவும் ~~35கிராம் போட்~~டு

331. 35கி போட்டு அரைத்து
உலர்த்திப் பொடித்துக் குப்பியிலே அரை
பாகம் போட்டு சீலைமண் ஏழு செய்து
மூடி விடவும். (காலாக்கினி) செங்கல்லினைத்
தேய்த்து அதனையே சீலைமண்ணாகச் செய்து
வாலுகையில் ஏற்றி விடவும்.

332.

பன்னிரெண்டு மணிநேரம் ஒரு விறகினாலும் அடுத்த
பன்னிரெண்டு மணிநேரம் இரு விறகினாலும் அடுத்த
பன்னிரெண்டு மணிநேரம் மூன்று விறகினாலும்
எரித்துக் கொள்ளவும். மூன்று மணிநேரம்
நிர்வாணி பூசை செய்து நன்றாக ஆறிய
பின் எடுத்துப் பார்த்தால் செந்தூரமாக
மாறியிருக்கும். உலோகங்களுக்கு நூற்றுக்
கொன்று கொடுக்க வேதையாகும்.

ஆடமப்பா கிளைகொள்தான் விளக்காய் காந்தா
னைப்பனே அன்பத்தில் பொடித்துக் கொண்டு
நாடமப்பா செம்பருத்தும் பூத்தார் போலே
நலமாக நாற்சாம மாட்டிக் கொண்டு
தாமப்பா புதும்பு நானு சாமந்
திப்பாமல் திக்கற்றியான் பழச்சார் கேளு
சாமப்பா யருசாம மாட்டிக் கொண்டு
சமத்தாகப் பொற்கையான் சாறு கேளே
330.

கோளப்பா சாமநெண்டு ஆட்டிக் கொண்டு
கொடியான நெகத்திலே பலதும் போட்டு
நாளப்பா அனைத்துமத்தில் பொடியாய்ச் செய்து
44அ. நலமான இப்பியாலே அனைதான் போட்டு
வேளப்பா சீனையது யேழுஞ் செய்து
வெகுஅருக்காய் காலாக்கினி செங்கை தேய்த்துப் போட்டு
ஆளப்பா வாய்க்கிமந்தச் சீனை செய்து
அப்பனே வாழுக்கைய் வேற்றி யாட்டுடே.
331.

ஆட்டப்பா சாமனால் ஸ்ரீ மாக
அப்பனே சாமனான் அமல வன்னி
நூட்டப்பா சாமனாள் காடாக்கினிதான் சாமமொன்று
நூதண்ட நிர்வாண பூசை செய்து
காட்டப்பா ஆநிரையின் னெடுத்துப் பாரு
கதிர்போலே செந்தூரங் கண்கொள் ளாது
நீட்டப்பா வேகத்தில் நாற்றுக் கொண்டு
நினைக்குமட்டா ஸ்வர்ணமது பத்து மாற்றே
332.

333. இந்தச் செந்தூரத்தை 130மி.கி அளவெடுத்துத்
தேனில் கலந்து வருடம் முழுவதும் உட்கொண்டால் விந்து
வானது கீழே சிந்தாது கட்டுப்படும்.
உடல் வன்மை பெறும். மூச்சை அடக்கி
ஆளும் திறன் பெறுவர். நூறு பெண்களுக்கு
இன்பத்தைத் தருமளவுக்குப் பலம் பெற்றிருப்பர்.
உடலானது சிவந்து பொன் போல் மிளிரும்.
இறுகி வயிரம் போலாகும்.

பத்தாகுந் தெத்தின் இன்றியிடை தேனில்
பக்குவமாய் வருசமொன்று கொண்டா யானால்
வைத்தாகும் விந்துவப்பக்கே கீழ்நோக் காது
விட்டுவிட்டு சரீரமது வாசி கட்டும்
அத்தான வெண்கருட வையவ தத்தான்
அப்பனை நாறுவெண்கள் ஊற்றுப் போவார்
சித்தான தேகமது இவந்தி மின்னுந்
தேகமது யாறுக்கியே வயிரம்போ லாகும்
333.

இக்கணைப்பை, மெய்ப்பினை சரிபார்த்து, புத்தகமாக
இப்புதினத்தை அச்சுக்கு கொடுக்கலாம்.

9/1/98
தனி அலுவலர்.

க. லலிதா. நகலெடுப்பவர்.

ஏப்ரல் மாத பணி விவரம்.

மொத்த வேலை நாட்கள் - 19

நான் வேலைசெய்த நாட்கள் 17½.

மொத்தப் பக்கங்கள் - 81-164 = 84.

கு. வனிதா.

பக்கங்கள்.

1. 6149 ஆதரிசிநாடி - 16 (165 -180)
2. 605. மூலிகை இணைபாடம் - 44 (181-224)
3. 608. பூகிமுனி சிந்தாமணி. 23 (225-247)
4. 592. வாகட சாஸ்த்திரம். 53 (248-300)

மொத்த பக்கங்கள் - 136.